பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

10 04 2024 7 15

புதன்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. பிஜேபி ஆட்சியில் நாட்டின் எல்லைகள் பாதுகாக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் மூத்த தலைவர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

2. பிஜேபி அரசின் கொள்கைகளால் அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே தெரிவித்துள்ளார்.

3. உலக ஹோமியோபதி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

4. சத்தீஸ்கரின், துர்க் மாவட்டத்தில் பள்ளத்தாக்கில் பேருந்து கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர். 15-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

5. இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான மூன்றாவது ஹாக்கிப் போட்டி பெர்த்தில் இன்று நடைபெறுகிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிஜேபி ஆட்சியில் நாட்டின் எல்லைகள் பாதுகாக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் மூத்த தலைவர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

அசாம் மாநிலத்தின் லக்கிம்பூர் மற்றும் தின்சுகியாவில் நேற்று பிரசாரம் மேற்கொண்ட அவர், பிஜேபி ஆட்சிக்கு வந்த பின்னர், இந்திய நிலப்பரப்பு எதையும் சீனா ஆக்கிரமிக்கவில்லை என்றார்.

கடந்த 10 ஆண்டுகளில் அசாம் மற்றும் பிற வடகிழக்கு மாநிலங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தின்போது வடகிழக்கு மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

தற்போது வளர்ச்சிப் பாதையில் வடகிழக்கு மாநிலங்கள் செல்வதாக அவர் கூறினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் பல அமைதி ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாகவும், 9 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட கிளர்ச்சியாளர்கள் சரணடைந்து அமைதிப் பாதைக்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வடகிழக்கு மாநிலங்களின் 80 சதவீத பகுதிகளில் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் திரும்பப் பெறப்பட்டுள்ளது என்றும் திரு அமித்ஷா கூறினார்.

அருணாசலப் பிரதேசத்தில் பிரசாரம் மேற்கொண்ட பிஜேபி மூத்த தலைவர் திரு ராஜ்நாத் சிங், இந்திய எல்லைகளில் அத்துமீறினால் உரிய பதிலடி கொடுக்கப்படும் என்றார்.

அண்டை நாடுகளுடன் நல்லுறவைப் பராமரிக்கவே இந்தியா விரும்புதவதாகவும் அவர் தெரிவித்தார்.

அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி எனவும் இங்குள்ள இடங்களுக்கு சீனா பெயர் வைப்பதால் அது அந்நாட்டுக்குச் சொந்தமாகி விடாது என்றும் அவர் கூறினார்.

இதுபோன்ற நடவடிக்கைகள் இரு நாட்டு உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

பிஜேபி அரசின் கொள்கைகளால் அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் கூறியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பிஜேபி ஆட்சியில் நாட்டின் பொருளாதாரம் பின்னடைவைச் சந்தித்துள்ளது என்றும் குடும்பங்கள் மீதான கடன் சுமை அதிகரித்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

சேமிப்பு கிட்டத்தட்ட 50 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள், ஏழைகள், அனைவரும் சிக்கலைகளைச் சந்தித்துள்ளதாக திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

இதனிடையே காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டில் வேலைவாய்ப்பின்மை அதிகரித்துள்ளதாகக் கூறியுள்ளார்.

பொருளாதாரம் தொடர்பாக தவறான தகவல்களை அரசு தெரிவித்து வருவதாகவும் திரு ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாக மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனா தலைவர் திரு ராஜ் தாக்கரே அறிவித்துள்ளார்.

மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், திரு நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பிரதமராவதை உறுதி செய்வதற்காக ஆளும் கூட்டணிக்கு, தமது கட்சி நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதாகக் கூறினார்.

மக்களவைத் தேர்தலில் மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனா போட்டியிடாது எனவும் பிஜேபி கூட்டணி வேட்பாளர்களை ஆதரிக்கும் என்றும் திரு ராஜ்தாக்கரே தெளிவுபடுத்தியுள்ளார்.

<<<<>>>>

ஆந்திராவில் 6 மக்களவைத் தொகுதிகள் மற்றும் 12 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான வேட்பாளர்களை காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

இதன்படி விசாகப்பட்டினம் மக்களவைத் தொகுதியில் புலுசு சத்யநாராயண ரெட்டியும், திருப்பதி மக்களவைத் தொகுதியில் டாக்டர் சிந்தா மோகனும் போட்டியிடுகின்றனர்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில் நாடு முழுவதும் தேர்தல் ஆணையத்தின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்திலும் மாவட்டம்தோறும் இது தொடர்பான நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

முதல்முறை வாக்காளர்களுக்காக வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து தென்காசியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இது பயனுள்ளதாக அமைந்தது என்று அதில் பங்கேற்ற மாணவிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

உலக ஹோமியோபதி தினம் இன்று கடைபிடிக்கப்படுகுறது.

ஹோமியோபதி மருத்துவத்தின் நிறுவனரான ஜெர்மனியைச் சேர்ந்த சாமுவேல் ஹானிமனின் பிறந்த தினத்தையொட்டி, 2005–ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 10–ம் தேதி இந்த தினம் உலகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இதையொட்டி ஆயுஷ் அமைச்சகத்தின் சார்பில் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

புதுதில்லியில் ஹோமியோபதி ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சில் ஏற்பாடு செய்துள்ள இரண்டு நாள் மாநாட்டை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று தொடங்கி வைக்கிறார்.

“ஹோமியோபதியில் ஆராய்ச்சியை மேம்படுத்துதல்” என்ற கருப்பொருளில் இந்தக் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது.

இதில் ஆயுஷ் அமைச்சகத்தின் உயர் அதிகாரிகளும், ஸ்பெயின், கொலம்பியா, கனடா, பங்களாதேஷ், நெதர்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

தமிழக முன்னாள் அமைச்சர் ஆர்.எம். வீரப்பனின் மறைவு வேதனை அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மக்கள் சேவையில் ஆர்.எம். வீரப்பன் ஆற்றிய பங்களிப்புக்காவும், எம்.ஜி.ஆரின் கொள்கைகளை பிரபலப்படுத்தியதற்காகவும் அவர் என்றென்றும் நினைவுகூறப்படுவார் என திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

சத்தீஸ்கரின், துர்க் மாவட்டத்தில் நேற்று மாலை பேருந்து ஒன்று பள்ளத்தாக்கில் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர். 15–க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

காயமடைந்த ஐந்து பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் மாநிலத்தின் தலைநகரான ராய்ப்பூரில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து சத்தீஸ்கர் முதலமைச்சர் திரு விஷ்ணு தியோ சாய் வேதனை தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு சிறந்த மருத்துவ சிகிச்சையை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

இந்தியக் கடலோரக் காவல்படையின் மாசுக் கட்டுப்பாட்டு கப்பலான சமுத்ரா பஹேர்தார் புருனே நாட்டின் மௌராவிற்கு சென்றுள்ளது.

அதன்படி மூன்று நாள் பயணமாக புருனே சென்றுள்ள இந்தக் கப்பலின் பயணம், மாசுபாட்டைக் கட்டுப்படுத்துதல், கடல்சார் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள், கடல்சார் சட்ட அமலாக்கம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது என பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே இக்கப்பல் வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸுக்கு இதே ரீதியில் பயணம் மேற்கொண்டுள்ளது.

<<<<>>>>

தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தின் கீழ் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவை ஏப்ரல் 27ஆம் தேதி வரை மத்திய அரசு நீட்டித்துள்ளது.

முன்னதாக இவற்றை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி ஏப்ரல் 12 என அறிவிக்கப்பட்டு இருந்தது.

தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம் கடந்த ஆண்டு 19 ஆயிரத்து 744 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடங்கப்பட்டது.

<<<<>>>>

தமிழகத்தின் ஸ்ரீவில்லிபுத்தூர் மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியில் சாம்பல் நிற அணில்கள் கணக்கெடுப்பு பணி இன்று தொடங்குகிறது.

இப்பணி இரண்டு நாட்கள் நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாட்டில் வட மாநிலங்களில் சில இடங்களில் சனிக்கிழமை வரை லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர், மகாராஷ்டிரா, மேற்குவங்கம், ஜார்க்கண்ட், ஒடிசா, பீகார் மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் இடி, மின்னல் மற்றும் காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என அந்த மையம் கூறியுள்ளது. தெலங்கானா மற்றும் கேரளாவின் சில இடங்களிலும் மழை பெய்யக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>**

இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான மூன்றாவது ஹாக்கிப் போட்டி இன்று நடைபெறுகிறது.

பெர்த்தில் நடைபெறும் இப்போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.

5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் முதல் 2 போட்டிகளில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றது.

**<<<<The End>>>>**